
கிராங்கியம்

கருப்பண்ணசுவாமி கோயில் வரலாறு

Printing Mistake

32-2

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி
ஸ்ரீ உறங்காபுலிக் கருப்பண்ண சுவாமி
கோயில் வரலாறு



முயற்சி : தேவகோட்டை SY பழனியப்பன்
காரைக்குடி.
செல் : 94 434 434 95



அருள்மிகு அங்காள பரமேஸ்வரி



அருள்மிகு இராக்காயி அம்மன்



அருள்மிகு ஏகம்மன்

உறங்காப்புளி கருப்பர்

வரலாறு திரட்டித் தந்து உதவியவர்
திரு. P.VR.M. முத்துகணபதி பூசாரி

மதுரையை ஆட்சி செய்த அரிமர்த்தன பாண்டியன், தனது குதிரைப் படையைப் பலப்படுத்த விரும்பினான். இதற்காக அரேபிய குதிரைகள் வாங்க முடிவு செய்தவன், மந்திரி வாதவூராரை (பிற்காலத்தில் மாணிக்கவாசகர்) நாகை கடற்கரைக்கு அனுப்பினான்.

நாகை நோக்கிப் பயணித்த வாதவூராருக்கு, திருப்பெருந்துறை (ஆவுடையார்கோவில்) எனும் ஊரில் காட்சி தந்தருளினார் சிவபெருமான். இந்த ஊரில் தனக்கு ஓர் ஆலயம் எழுப்புமாறும் பணித்தார்.

அதன்படியே ஆலயம் கட்டத் துவங்கினார் வாதவூரார். குதிரைகள் வாங்க அவர் கொண்டு வந்த பொன்-பொருள் அனைத்தும் ஆலயம் எழுப்புவதற்கு செலவாகிப் போனது. எனவே, குதிரைகள் வாங்க வழியின்றித் தவித்தார். வாதவூராரின் இன்னலைத் தீர்க்க நினைத்த இறைவன், நரிகளைப் பரிகளாக்கி (பரி-குதிரை), வாதவூராரின் வடிவில் தாமே சென்று பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தார்.

அன்று இரவே குதிரைகள் மீண்டும் நரிகளாகி ஓட, கோபம் கொண்ட மன்னன் வாதவூராரை தண்டிக்க முற்பட்டான்.

அப்போது சிவபெருமான், **'அனைத்தும் தமது திருவிளையாடலே'** என்பதை உணர்த்த, மன்னன் மெய் சிலிர்த்தான். திருப்பெருந்துறைக்கு ஓடோடி வந்து, வாதவூராரால் துவங்கப்பட்ட ஆலயப் பணிகளை பூர்த்தி செய்து முழுமையாகக் கட்டி முடித்தான்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்துக்கு மேற்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது ராங்கியம். அந்தக் காலத்தில், **'ராஜசிங்க மங்களம்'** எனப்பட்டது இந்த ஊர். நரிகளை பரிகளாக்கி மதுரை நோக்கி வந்த சிவபெருமான், அந்திப் பொழுதில் இந்த ஊருக்கு வந்தார். ஊருக்கு கிழக்கு எல்லையில் இருந்த புளிய மரத்தடியில் குதிரைகளை நிறுத்திவிட்டு, அப்படியே தூங்கிப்போனார். இரவில், புளியமர இலைகள் மூடிக் கொள்வது வழக்கம் (இதையே சிலர், புளிய மரம் தூங்குகிறது என்பர்). ஆனால் நித்திரை கொண்டிருப்பது சிவபெருமான் என்று தெரிந்ததும் இரவு முழுவதும் புளியமரத்தின் இலைகள் விழித்திருந்தனவாம்!

விடிந்ததும் புளிய மரத்தின் செயலால் மகிழ்ந்த சிவனார், **"என்னை வழிபடுகிறவர்கள் இனி உன்னையும் வழிபடுவர்"** என்று கூறிச் சென்றார்.

காலங்கள் ஓடின! ஒரு நாள், ராஜசிங்க மங்களத்தில், இருந்து வேட்டைக்குக் கிளம்பிய வேடர்கள் சிலர். முயல் ஒன்றைத் துரத்தினர்.

அந்த முயல் சிவனாருக்காக விழித்திருந்த புளியமரத்தடியில் ஈச்சம் புதருக்குள் நுழைந்து பதுங்கியது. ஈச்சம்புதரை நோக்கி தங்களது ஈட்டிகளை வீசி எறிந்தனர் வேடர்கள். ஆனால், முயல் சிக்கவில்லை! புதருக்குள் புகுந்த முயல் எங்கே போயிருக்கும்? என்று குழம்பிய வேடர்கள், அருகில் வந்து புதரை விலக்கிப் பார்த்தனர். உள்ளே, சுயம்புவாக முளைத்த ஒரு சிவலிங்கம்! வேடர்களின் ஈட்டிகள் பட்டதால் லிங்கத் திருமேனியில் ரத்தம் கசிந்ததாம்!

இதைக் கண்டு, காத்துக் கருப்புவின் வேலையாக இருக்குமோ? என்று நினைத்த வேடர்கள், சிவலிங்கத்தை அப்படியே விட்டுச் சென்றனர். சிறிது நேரத்தில், அந்த ஊரைச் சேர்ந்த முத்துவீரப்பர் என்பவர் அங்கு வந்தார். அப்போது புளியமரத்து நிழலில் வயோதிக சந்நியாசி ஒருவர் அமர்ந்திருந்தார்.
அவர், களைப்பாக இருக்கிறது, இங்கு சிறிது இளைப்பாறி விட்டுச் செல்லலாம் என்றால், தலை வைத்துப் படுக்க தோதான இடம் இல்லை. எனவே சிறிது நேரம், உங்கள் மடியில் தலை வைத்துப் படுக்கட்டுமா? என்று முத்துவீரப்பரிடம் கேட்டார். சந்நியாசியின் மீது இரக்கப்பட்ட முத்துவீரப்பர் புளிய மரத்தடியில் அமர்ந்தார். அவரின் மடியில் தலை வைத்துப் படுத்த சந்நியாசி, உறக்கத்தில் ஆழ்ந்தார்! மதியம் கடந்து மாலைப் பொழுது துவங்கியது. சந்தியாசி எழவில்லை. அதுவரை பொறுமையுடன் இருந்த முத்துவீரப்பர், சந்நியாசியின் தலையை மெள்ள நகர்த்தி, அவரை தரையில் கிடத்தி விட்டு வீட்டுக்குக் கிளம்பினார்.

இரவு முத்துவீரப்பரது கனவில், வயோதிக சந்நியாசி கோலத்தில் தோன்றிய ஈசன், நரிகளை பரிகளாக்கியது முதல், ஈச்சம் புதரில் சுயம்புவாகத் தோன்றியது வரை அனைத்தையும் தெரிவித்தார். அத்துடன், "புளியமரத்தடியில் கருப்பனின் அவதாரமாகக் குடி கொண்டிருக்கிறேன். என்னை வழிபட்டால், இந்த ஊர் மக்களுக்கு எந்தத் தீங்கும் வராமல் காப்பேன்" என்று அருளினார்.

மெய்சிலிர்த்த முத்துவீரப்பர், "சந்நியாசியாக வந்தது தாங்கள் என்பதை அறியாமல், பாவம் செய்து விட்டேனே... என்னை மன்னியுங்கள்" என்று புலம்பினார். அதற்கு "பயம் வேண்டாம். உமது பொறுமையை சோதிக்கவே அப்படிச் செய்தேன். பொறுமையின்றி செயல் பட்டதால், பெரிய தண்டனை எதுவும் இல்லை. இனி உமது வழி வரும் வாரிசுகளுக்கு, முதலில் பெண் குழந்தைகளாகவே பிறக்கும். பொறுமையுடன் இருந்தால் கடைசியில் ஆண் குழந்தை பிறக்கும்!" என்று அருளி மறைந்தார் ஈசன்.

இதையடுத்து, புளியமரத்தடியில் கருப்பருக்கு சிறிய கோயில் ஒன்றை எழுப்பினார் முத்துவீரப்பர். சிவபெருமானுக்காக, உறங்காமல் நின்று நிழல் கொடுத்த புளிய மரத்தின் அடியில் இருப்பதால் இவருக்கு, "உறங்காப்புளி கருப்பர்" என்று பெயர்.

சந்நிதியில் இவருக்குப் பின்னால் ஸ்ரீ ஆஞ்சநேயர் சிற்பமும் உள்ளது. அதேபோல் கோயிலின் முகப்பு கோபுரத்தின் இருபுறமும் பிரமாண்டமான ஆஞ்சநேயர் சிலைகளைக் காணலாம்.

இதனால் உறங்காப்புளி கருப்பர், இங்கு சிவ-விஷ்ணு வடிவமாக இருப்பதாகச் சொல்கின்றனர். ராமபிரான் இலங்கை செல்லும்போது, ஒரு நாள் இரவு இதே புளியமரத்தடியில் தங்கினாராம். அப்போதும் புளியமரம் உறங்காமல் நின்றதாம். இதையடுத்தே இங்கு உறங்காப்புளி கருப்பருக்கு ஆலயம் தோன்றியது என்பவர்களும் உண்டு.

புளியமரத்தின் அருகில் கிழக்கு நோக்கி உள்ளது உறங்காப்புளி கருப்பரது சந்நிதி. வழக்கத்துக்கு மாறாக... இங்கு, அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார் உறங்காப்புளி கருப்பர். இவரின் இடப்பக்கத்தில் சின்னக் கருப்பர். இந்த சந்நிதிக்கு அருகில் உள்ள கொட்டகையில் வீர ஆஞ்சநேயர், இருளப்பசாமி, பெரியகருப்பர், வீரப்ப பூசாரி, முத்துப்பேச்சி ஆகியோர் வடக்கு நோக்கி நிற்கின்றனர். சற்று தள்ளி வந்தால்.. உறங்காப்புளி! இப்போதும், இதன் இலைகள் இரவில் மூடுவது இல்லையாம்! மரத்தடியில் அமர்ந்த நிலையில் முத்துவீரப்பர் சிலை.

இவரை வணங்கிவிட்டு பிரகாரம் வந்தால், தனித்தனி கருவறைகள் வடக்கு நோக்கிய நிலையில் ராக்காயி அம்மனும், கையில் குழந்தையுடன் கிழக்கு நோக்கி ஏகாத்தம்மனும் நிற்கின்றனர். இந்தப் பகுதியில் உள்ள நகரத்தார்... தங்களது வீடுகளில் சிறு வயது பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் இறந்தால், அவர்களின் ஆன்மா ஏகாத்தம்மனிடம் சேர்வதாக ஒரு நம்பிக்கை. மரணம்

நிகழ்ந்து ஓராண்டு முடிந்ததும், ஏகாத்தம்மனுக்கு பட்டுப் புடவை வைத்தும் மாங்கல்யம் அளித்தும் வழிபடுகின்றனர். மேலும் பெட்டைக் கோழியை பலியிட்டு குழம்பு வைத்து ஏகாத்தம்மனுக்குப் படையல் இடவும் செய்கின்றனர்.

உறங்காப்புளி கருப்பர் சந்நிதிக்கு நேர் பின்பகுதியில்... சிவபெருமான் நரிகளை பரிகளாக்கியதை நினைவூட்டும் விதம் குதிரைச் சிலை ஒன்று உள்ளது. இதையடுத்து, வடக்கு நோக்கி அமர்ந்திருக்கும் சப்த கன்னிகளது சந்நிதி. இங்கு, கருப்பராக அவதாரம் எடுத்து நிற்பது சிவனார் என்பதால், சக்தியும் அங்காள பரமேஸ்வரியாகக் காட்சி தருகிறாள். கருப்பர் சந்நிதிக்கு அடுத்து அம்மனின் கருவறை உள்ளது. சந்நிதியை வலம் வரும்போது, இடப்பக்கத்திலும் இரண்டு பனைமரங்கள். இவற்றின் அடியில் பனையடி கருப்பர் வீற்றிருக்கிறார். முற்காலத்தில் இந்த இடத்தில் ஒரேஒரு பனை மரமே இருந்ததாம். பின்னர் அதிலிருந்து விழுந்த விதையின் மூலம் இரண்டு மரங்கள் முளைத்தனவாம்! ஒன்று கனி கொடுக்காத ஆண் பனை; மற்றொன்று பலன் கொடுக்கும் பெண் பனை.

அங்காள பரமேஸ்வரிக்கு எதிரே உள்ள மண்டபத்தில் தெற்கு நோக்கி நிற்கிறார் அகோர வீரபத்திரர். அடுத்து காடேரி, மகா காளி, சடைமுனியாண்டி, ஆதிசேஷன் ஆகியோர் சித்த பிரமையால் பாதிப்புற்றோர், செவ்வாய்க் கிழமைகளில் இங்கு வந்து, காடேரிக்கும் மகா காளிக்கும் கிடா பலி கொடுத்து, அப்பம் சுட்டு படையலிட்டு வழிபட்டால் நலம்

பெறுவர் என்பது நம்பிக்கை. கோயிலின் மைய மண்டபத்துக்கு வெளியே, திறந்த வெளியில் பிரமாண்டமான இரண்டு குதிரைகள் நிற்கின்றன. கோயிலுக்கு வெளியே வடக்கில், முன்னோடியும் சப்பாணியும் சந்நிதி கொண்டிருக்கிறார்கள். கருப்பரின் காவல் தெய்வங்களான இவர்கள், தவறு செய்தவர்களை மன்னிக்க மாட்டார்களாம்! கோயிலை ஒட்டி நந்தவனம். இதன் நடுவே, அரிவாள் வடிவமாக நிற்கிறார் மாசான கருப்பர்.

கருப்பருக்கு இங்கு உயிர்பலி பூஜை உண்டு. ஆடி மாதத்தில் நகரத்தார் சமூகத்தினர் தங்களது பங்காளிகளுடன் வந்து, கருப்பருக்கு கிடாவெட்டி பூஜை நடத்துகின்றனர். ஏவல், பில்லி - சூனியம் மற்றும் காத்துக் கருப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் இங்கு வந்து சென்றால் நிச்சயம் பலன் உண்டு என்கின்றனர். பிள்ளைப்பேறு வாய்க்கவும் திருமணத்தடை நீங்கவும் விரும்புவோர், கருப்பருக்கு அருகே உள்ள கூமத்தி மரத்தில், சேலைத் தலைப்பில் தொட்டில் கட்டி வேண்டிக் கொண்டால் உரிய பலன் கிடைக்குமாம்!

மாசி - மகா சிவராத்திரியே இங்கு முக்கிய விழா. முதல் நாளன்று, **'தட்சன்'** வதத்தை **'கப்பறை விழா'** வாகக் கொண்டாடுகின்றனர். பச்சரிசி மாவில் தட்சனின் உருவம் செய்து, முறத்தில் வைக்கிறார்கள் நள்ளிரவு 12 மணிக்கு மேல் சாமி அழைத்து, அருள் வந்து ஆடும் வீரபத்திரர் சாமியாடி அருள்வாக்கு சொல்வார். பிறகு, நந்தவனத்தில் உள்ள மாசான கருப்பர் சந்நிதிக்கு தட்சணை எடுத்துச் சென்று சம்ஹாரம் செய்வார்.

மறுநாள் (2 ஆம் நாள்) சிவராத்திரி! ஆறு கால பூஜையும் களை கட்டும். அன்று மாலையில் அம்மனுக்கு திருவிளக்கு பூஜை நடைபெறும். 3 - ஆம் நாள், கருப்பருக்கு விசேஷ பூஜை வைத்து சாமி அழைப்பர். அப்போது கருப்பராடி (கருப்பர் சாமியாடி) அருள்வாக்கு சொல்வார். இரவு, ரதத்தில் பாரிவேட்டைக்குச் சென்று வரும் அங்காள பரமேஸ்வரி அம்மன், கோயிலைச் சுற்றி வந்து சந்நிதியை அடைவாள்.

4 ஆம் நாள் காலையில் இருந்தே கருப்பருக்கு கிடா வெட்டு பூஜைகள் அமர்க்களப்படும். அன்று மதியம் அன்னதானமும் நடைபெறும். 5-ஆம் நாள் விழாவில் அகோர வீரபத்திரருக்கு கரும்பு, தேங்காய், பழம், பயறு வகைகளுடன் சர்க்கரை பொங்கல் படைத்து, மதியம் ஒரு மணிக்கு பூஜை நடைபெறும். இதை **பச்சை வாழை பரப்புதல்** என்கிறார்கள். 6ஆம் நாள் விழாவில் நடைபெறும் சிறிய அளவிலான படையல் பூஜையை **சின்னப்பச்சை வாழை** என்பர். இத்துடன் விழா நிறைவு பெறும்.

விஷேச நாட்கள் தவிர செவ்வாய்,வெள்ளி, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளும் கருப்பருக்கு விசேஷம். இங்கு தரப்படும் விஷேச பிரசாதம்... உறங்காப்புளியின் இலைதான்...

குள. சண்முகசுந்தரம்
படங்கள் : **எஸ். சாய் தர்மராஜ்**

நன்றி :
சக்தி விகடன் (ஜனவரி 26, 2009)




அருள்மிகு வீரபத்ரர்



அருள்மிகு முன்னோடி & அருள்மிகு சப்பாணி



அருள்மிகு முத்துவீரப்ப சாமி



அருள்மிகு அங்காள பரமேஸ்வரி
ஸ்ரீ உறங்காபுளிக் கருப்பண்ண சுவாமி ஆலய
அழகிய முகப்பு தோற்றம் மற்றும்
இராஜகோபுரம்